# பன்முகப் பார்வையில் பெருமாள் முருகன் சிறுகதைகள்

# From a Multifaceted Perspective Perumal Murugan Short Stories

**க. உஷாநந்தினி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு

**K. Ushanandini**
*Assistant Professor, Department of Tamil*
*Erode College of Arts and Science, Erode*

## ஆய்வுச் சுருக்கம்

*ஒரு எழுத்தாளன் தான் அனுபவப்பட்ட வார்த்தைகளின் ஒட்டுமொத்த கூட்டாக பிரசுரமாக வெளியிடப்படுவது கவிதை அல்லது சிறுகதை அல்லது நாவலாகும். இதில் கவிதை என்பது சிறிய அளவு வரிகளில் உள்ள செய்தியினை இலக்கணப் போக்கிலும் கற்பனையிலும் சமூகத்தை குறித்து வெளிக்காட்டுகிறது. சிறுகதை என்பது சிறிய வட்டாரம், சிறிய கருத்து, சிறிய மையம் போன்ற ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு சமூகக் கருவினை வெளிக் காட்டுகிறது. சிறிய துரும்பில் இருந்து ஒரு முழுமை பட்ட வாழ்வினை அல்லது சமூகத்தினைத் திறந்து வெளிப்படுத்துவது நாவலாகும். இவ்விடத்தில் பெருமாள் முருகனின் சிறுகதைகள் சமுதாயத்தை நோக்கி தனித்த ஒரு பார்வையைக் கொண்டிருக்கிறது. சமூகத்தின் பால் வெளிப்படும் உரிமைகளும், உள்ளார்ந்த செய்திகளும், உண்மை நிகழ்வுகளும் ஒரு பன்முகப் பார்வையாக இக்கட்டுரையில் காணலாகிறது.*

## Abstract

*A poem or a short story or a novel is collection of words that a writer has experienced. In this, poem expresses the message in short lines about the society through content, grammar and imagination. A short story reveals a social essence within a certain boundary, such as a small circle, a small concept, a small center. A novel unfolds and unfolds a complete life or society from a small drum. In this respect, Perumal Murugan's short stories have a unique perspective towards society. Rights, internal messages and true events emerging from society can be seen in this article as a multifaceted view.*

**Citation**

Ushanandini, K. "From a Multifaceted Perspective Perumal Murugan Short Stories." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 1, 2024, pp. 24–27.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20069407*

**பொருளுரை**

**கதைப் பொருண்மைகள்**

*பெரும்பான்மையாக இலக்கிய உலகில் பெருமாள் முருகன் அவர்கள் வெளிப்படுத்துகின்ற சிறுகதைகள் சமூக சிக்கல்கள் சார்ந்ததாகவும், சமுதாயத்தில் வந்து சேர வேண்டிய உரிமைகளையும், கீழ் மக்களின் சுதந்திரங்களையும் பறைசாற்றும் விதமாக லாபகமாக கையாளப்பட்டிருக்கிறது. அதிலும் நாமக்கல் வட்டாரம் சார்ந்த விளிம்பு நிலை மக்களினுடைய அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள் தான் பெருமாள் முருகனின் எழுத்தின் அடையாளம். அப்பகுதியில் உள்ள (நாமக்கல்) கவுன்டர் எனும் சாதிக்கும் பறையர், வண்ணார், தோட்டி, சக்கிலி, அம்பட்டன் போன்ற சாதியினருக்கும் இடையே உள்ள கொத்தடிமை, அதட்டல், நீர் விளையாட்டுக்கள், புணர்வுகள், கழிவறைப்பதிவுகள் போன்றவைகள் பெருமாள் முருகனின் கதைச் சொல்லாக அமைகின்றன.*

**சாதியச் சமூகம்**

*'கோரக்காடு' என்னும் சிறுகதையில், அபூரில் வாழ்ந்து வருகின்ற வண்ணாத்திப் பெண்ணொருத்தி தன் கணவனை இழந்து விடுகிறாள். அவளை விதவைச் சடங்கு செய்ய வற்புறுத்துகின்றனர் ஊர் பெரியவர்கள். அதில் படித்த அத்தையும் உறவுக்காரன். இந்த மாதிரியான சடங்குகள் வேண்டாம் என்று தடுக்கிறான். என்னடா நீ பொழப்பத்தவனா இருக்கற. பெருமா கழுத்துல அஞ்சு பவுன் போட்டிருக்கா' இப்ப உட்டா சமயம் ஏதுடா, சாங்கியம் பண்ணி வெள்ளச் சீல குடுத்தா நவையக் கழட்டித்தான ஆவோணும்.../ என்று அவனின் அம்மா கட்டளை இடுகிறாள். இப்படி இன்னும் மாறாமல் இருக்கும் கொறக்காட்டை புனைந்து எழுதுகிறார்.*

*வேக்காடு எனும் கிராமத்து கவுன்டன் தன் கிணற்றில் யாரும் நீர் அருந்தக் கூடாது என்பதற்காக மேற்கொண்ட செயலை எதிர்நிலையில் புனைவது 'வேக்காடு' கதை. 'ஆளுக்காரன்' என்னும் சிறுகதையில் கவுண்டனுக்கும் செருப்பு தைக்கும் சமூகத்தாருக்கும் இடையே இன்று நிகழும் அதிகாரப் பகிர்வினைப் பற்றியே படைத்திருக்கிறார். 'மேடு' என்னும் சிறுகதையில், பள்ளத்தில் இருந்து மேட்டு வரை மிதிவண்டியைத் தள்ளி வரும் கவுண்ட பெண் அருகில் வந்த சக்கிலி இனப்பெண் அவனிடம் தன் இளமைகால அனுபவங்களை ஆசையோடு பகிர்கிறாள். அதை பெரிதுபடுத்தாது செல்லும் கவுண்ட பெண் செல்கிறாள். பெண்களுக்கு மத்தியில் இருக்கக்கூடிய சாதிய அதிகாரப் பகிர்வை இதுவரை இவ்வளவு திடமாக யாரும் கையாண்டிருக்க முடியாது என்றே சொல்ல வேண்டும்.*

**அடித்தட்டு குடும்ப வாழ்க்கை**

*'உண்ணிகள்' என்னும் கதையிலிருந்து, ஏழை கணவனை இழந்தவள் எருமை மாட்டை வைத்து பிழைக்கிறாள். அதை தடுக்கும் ஆதிக்க சக்திகள் பற்றி எழுத்துக்களை பிரசுரம் செய்கிறார் எழுத்தாளர். கறிக்குழம்பு அடுப்பிலே வீணானதற்காக தன் மனைவியை பல்வேறு சூழலைச் சொல்லி அடிக்கும் கணவனை 'சிதைவு' கதை காட்டுகிறது. வறுமையால் குடும்பம் முடங்கி வறுமையில் உழல்வதை காட்சிபடுத்துகிறது 'முடக்கம்' எனும் கதை. பெருக்கா எலி தன் வீட்டில் இருக்கிறது என்று அதனைப் பிடிக் கும் காட்டுக்காரனிடம் சொல்ல, அவன் பெரிய எலியை எடுத்துக் கொண்டு சிறிய எலியைக் கொடுப்பதை 'கொடும்பினை' கதை சொல்கிறது.*

**புணர்ச்சிகள்**

*புணர்தல் என்பது ஒன்று சேர்தல் இணைந்து கொள்ளுதல் என்று பொருள்படும். ஆண் பெண் மட்டுமே இணைந்து கொள்வது புணர்வு அல்ல மாறாக விலங்குகளும் புணர்ந்து கொள்ளும் புணர்வு நிகழ்வினை கதைகளில் கையாளுகிறார் பெருமாள் முருகன். ஆட்டு கிடாய்க்கு ஒடை (விரய்) அடித்தல் என்பதாகும். அதனை வைத்தே அவரது 'ஒடை' எனும் கதை அமைந் துள்ளது. ஒடை அடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒருவன் வீட்டின் முன்பு ரொம்ப நேரம் ஒருவன் ஒடை அடிக்க ஆட்டுடன் காத்துக் கிடக்கிறான். ஆனால் அவன் தன் மனைவியுடன் புணர்ச்சி செய்து கொண்டிருக்கிறான். பெண்ணுக்காக (மனைவி) ஆண் வெம்பும் கதையை 'வெம்பல்' விளக்குகிறது.*

**மலம் சார்பதிவு**

*கழிவறை என்பது அன்றாட வாழ்க்கையில் தேவைப்படுகின்ற ஒரு அங்கமாகும். கழிவறையைப் பற்றி பேசும் போதே மனம் கூச்சமடைவதும், அந்த வார்த்தைகளைச் சொல்ல வாய்ப்புத்தி நிற்பதுமாகவே இருக்கின்ற சூழலில் கிராமத்து மக்கள் அதனை எப்படி சாதாரண சொல்லாக வெளிக்காட்டுகின்றனர் என்பதனை அவர்களின் பேச்சு நடையிலேயே எழுத்துக்களை கையாளுகிறார் எழுத்தாளர். 'தோழர் பி.எம்.மின் வெற்றி' என்னும் கதையிலிருந்து, டீக் குடித்தால் தான் மலம் வரும் என்கிற நம்பிக்கையை எதார்த்தவியலுக்கு உட்படுத்திப் எழுதி இருக்கிறார். 'வராக அவதாரம்' என்னும் கதை, சேற்றிலே உண்டு சேற்றிலே உறங்கும் பன்றி களைப் போல நகரக் கழிவறைகளில் அம்மண குளியல், அம்மண மலங் கழித்தலையும் கேள்விக்குட்படுத்துகிறது.*

*'மஞ்சள் படிவு' என்னும் கதையில் இருந்து, வயதான பாட்டி உடல் மாற்றத்தால் மலம் கழிப்பது கூட அதாவது தன்னை மீறி மலம் போவதை உணர்கிறாள். மருமகள் அதனைச் சுட்டிக்காட்டியதும் உணவே உண்ணாமல் இருந்து இறக்கிறாள். மலத்தின் மரணமாக அமைகிறது. 'பிசாசுக்குப் போதுமான விஷயம்' என்னும் சிறுகதையிலிருந்து, பாத்ரூமில் மலம் கழிக்கப் பழகிய பெண் திருமணமாகிச் சென்ற இடத்தில் திறந்த வெளியில்தான் மலம் கழிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள தவிர்க்கும் இளம் பெண்ணின் மன உளைச்சலை வெளிக்காட்டி அமைகின்றது. இக்கதைகள் யாவும் 'பீக்கதைகள்' என்னும் தொகுப்பிலிருந்து ஆராயப்பட்டன.2*

**கதைகளில் நீர்சார் பதிவுகள்**

*'நீரின்றி அமையாது உலகு' 3 - என்று திருக்குறளில் நாம் படித்ததுண்டு. அன்றாடம் உயிர்ப்பொருளாக பயன்படுகின்ற நீரில் மகத்துவம் மட்டும் இல்லாமல் விளையாட்டுக்களும், சடங்குகளும், நம்பிக்கைகளும் ஒளிந்திருக்கின்றன என்பதனை பெருமாள் முருகன் சிறுகதைகள் விளக்குகின்றன.*

*பெருமாள் முருகனின் கதைத்தொகுப்பில் மற்றொரு பெரும் சமூக இடத்தைப் பிடிப்பது நீர் விளையாட்டு ஆகும். நீரைப் பற்றிய பல்வேறு வகையான விளையாட்டுக்கள் பற்றியும், தத்துவங்கள் பற்றியும் அவருடைய எழுத்துக்கள் இலாவகம் கொண்டுள்ளது. 'மழைக்குருவி', என்னும் கதையில், மழை நீரில் விளையாடுவது என்பது பெண்களின் இயல்பான குணம். அப்படி மழைக்குருவியாக மாற நினைக்கும் பெண்ணை தடுக்கும் சூழலைப் பற்றி விவரிக்கிறது. கிணற்று நீரில் விளையாடும் குழந்தையின் மனநிலை 'புகலிடம்' கதைக் காட்டுகிறது. உடல் நீரின் விளையாட்டு தனிமையில் உடல் தாக நீரின் கோணங்களும் அதனை வரவேற்கும் மனநிலையும் பற்றியது 'சுவர்களும் கதவுகளும்' என்னும் சிறுகதை.*

*குழந்தையின் எச்சில் நீர் விளையாட்டு 'சிறுத்த பூதம்' எனும் கதை. அதீதக் கதைகளை விரும்பும் குழந்தை மனநிலையும் அதனைத் தன்னை மறந்து எழும் மதநீர் பட்டு பெற்றோரின் மகிழ்ச்சி விளையாட்டு, கணவன்-மனைவி உறவு, நாற்காலியில் அமர்ந்து பதநீர் அருந்தும் போதான இருமண உட்கிரகிப்புகளின் விளையாட்டு 'இசை நாற்காலி' கதை. குழந்தையின் சிறுநீர் பற்றிய கதைகளும், அக்குறிப்புள்ள கதைகளும் நிறைய தமிழில் உண்டு. ஆனால், பெ.மு.வின் சிறுநீர் பற்றிய புனைவு முற்றிலும் மாறுபட்டது. குழந்தையின் சிறுநீர் விளையாட்டே 'பெரிதினும் பெரிது' என்று எழுதுகிறார் எழுத்தாளர்.4*

**முடிவுரை**

*சாதியச் சமுகங்கள் மற்றும் அடிமைத் தனங்கள் அகற்றப்பட வேண்டிய ஒன்று. அவற்றினை மனிதனின் வேலை உற்பத்திக்காக பயன்படுத்தி கொத்தடிமையாக்குதல் மனித சமுகத்தை இழிவுபடுத்துதலுக்குச் சமமாகும். அடக்குமுறைகளும், ஆணாதிக்க முறைகளும் அகன்றுபோதல் வேண்டும்.*

**துணைநூற்பட்டியல்**


1. *பெருமாள் முருகன், திருச்செங்கோடு, இருபது சிறுகதைகள், 2013, நற்றிணைப் பதிப்பகம்.*
2. *பெருமாள் முருகன், பீக்கதைகள், 2006, அடையாளம் பதிப்பகம்.*
3. *சு. தமிழ்வேலு, திருக்குளாரின் திருக்குறள் தெளிவுரை, 2023, ஏழிசைப் பதிப்பகம். ப.21.*
4. *பெருமாள் முருகன், நீர்விளையாட்டு, இருபத்தொரு சிறுகதைகள், 2009, காலச்சுவடு பதிப்பகம்.*


## References


1. Perumal Murugan, Thiruchengode, Twenty Short Stories, 2013, Naritan Publishing House. Perumal Murugan, Fables, 2006, Sign Publishing.
2. Su. Tamilvelu, Thirukkular's Thirukkural Gallurai, 2023, Eizhai Publishing House. p.21. Perumal Murugan, Water Games, Twenty One Short Stories, 2009, Kalachuvadu Publishing House.